2 பாடம்

# வல்லமை

***இயேசுவைப்பற்றிப் பிரசங்கிக்கக் கூடாதென்பது ஸ்வீடனின் சட்டமாயிருந்தது. ஆயினும் ஜேம்ஸ், விக்டோரியா இருவரும் இயேசுவைப்பற்றிப் பிரசங்கித்ததால் சிறைப் பட்டனர். அவர்களது பிள்ளைகளான மேரியும், ஜோசப்பும், கேத்ரீனும் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டனர். சிறுவர்களாக இருந்த போதிலும் தைரியமாக இயேசுவைப்பற்றிப் பிரசங்கித்தனர். வெகுகாலத்திற்கு முன்பு இவ்வாறு தைரியமாய்ப் பிரசிங்கித்தவர்களைப் பற்றிப் பார்ப்போமா?***

தேவனைத் தொழும் படியாக, பேதுருவும் யோவானும், ஆலயம் சென் றார்கள். ஆலய வாசலிலே உட்கார்ந்திருந்த பிச்சைக் காரனைப் பார்த்தார்கள். நாற்பது வயதுக்கும் மேற்பட்ட அவன் பிறவியிலிருந்தே கால் நடக்கமுடியாதவனா யிருந்தான்.



அவன் பேதுருவிடமும் யோவானிடமும் பிச்சை கேட்டான். பேதுருவும் யோவானும் "எங்களை நோக்கிப்பார்" என்றார்கள். தனக்கு எதையோ தரப்போகிறார்கள் என்று மிகுந்த ஆசையோடும் ஏக்கத்தோடும் அவர்களை நோக்கிப்பார்த்தான்.

அப்போது பேதுரு, "வெள்ளியும் பொன்னும் என்னிடத்தில் இல்லை; என்னிடத்தில் உள்ளதை உனக்குத் தருகிறேன்; இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட" என்று சொன்னார். பின்னர் வலது கையினால் அவனைத் தூக்கிவிட்டார். உடனே அவன் சுகம் பெற்று குதித்து எழுந்து நின்று நடந்தான். அவனும் ஆலயத்திற்குள் சென்றான்.

பிறந்ததிலிருந்தே நடக்கமுடியாதவன் நடக்கிறதை அங்குள்ள மக்கள் பார்த்தார்கள். தேவனை அவன் துதிப்பதைக்கண்டு மிகவும் ஆச்சரியப்பட்டார்கள்.

## மனன வசனம்

**அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, தேவ வசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள்.**

**அப்போஸ்தலர் 4:31.**

பேதுரு, யோவான் அருகிலேயே அவன் நின்று கொண்டிருந்தான். ஆச்சரியத்துடன் மக்கள் ஓடிவந்தார்கள்.

இயேசுவைப் பற்றிக்கூற நல்ல ஒரு வாய்ப்புக் கிடைத்த தற்காக பேதுருவும் யோவானும் மகிழ்ந்தார்கள். ‘‘எங்களுடைய சொந்த வல்லமையாலோ, சக்தியாலோ நாங்கள் இந்த மனிதனைச் சுகமாக்கவில்லை. நமது தேவனாகிய இயேசுதாமே இவனுக்குச் சுகம் கொடுத்தார்.

இயேசுவை தேவன் என்றும், பாவிகளாகிய நம்மை மீட்க வந்த இரட்சகர் என்றும் நீங்கள் நம்பவில்லை. எனவே, சிலுவையில் இயேசுவைக் கொன்றீர்கள். ஆனாலும், இயேசு உயிர்த்தெழுந்தார். இன்றும் பாவிகளாகிய நம்மை நேசித்து உதவி செய்கிறார். அந்த இயேசுவின் நாமத்தின் வல்லமையினாலேதான் இந்த மனிதன் சுகம்பெற்றான்’’ எனக் கூடி நின்ற மக்களிடம் சொல்லிக் கொண்டிருந்தனர்.

அப்போது ஆசாரியர்களும், தேவாலயத்துச் சேனைத் தலைவனும் சதுசேயரும் வந்தனர். இயேசுவைப் பற்றியும், உயிர்த்தெழுதலைப் பற்றியும் அவர்கள் பிரசங்கித்ததால், மறுநாள் சாயங்காலம் வரையிலும் அவர்களைச் சிறையில் வைத்தார்கள்.

மறுநாளில் ஜனங்களது அதிகாரிகள், மூப்பர் வேதபாரகர் பிரதான ஆசாரியனாகிய அன்னா, காய்பா இன்னும் முக்கியமானவர்களும் எருசலேமில் கூடினர். பேதுருவையும் யோவானையும் நடுவே நிறுத்தினர்.



## செய்தி


**நம் வாழ்க்கையில் தேவவல்லமை கிரியை செய்வதுகுறித்து ஆலயத்தில் கற்றுக்கொள்கிறோம்.**

"நீங்கள் எந்த வல்லமையினாலே, எந்த நாமத்தினாலே அவனைச் சுகமாக்கினீர்கள்?" என்று மிகுந்த கோபத்துடன் கேட்டனர்.

பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட பேதுரு, இயேசுவைப் பற்றி மிகவும் அருமையாகவும் ஆதாரத்துடனும் பேசினார். பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டு ஏறக்குறைய 5,000 பேர் விசுவாசிகளாகளானார்கள். எனவே, பேதுருவையும் யோவானையும் தண்டிக்கப் பயந்தனர். ஆதலால், இனி இயேசுவைக் குறித்துப் பேசக்கூடாது எனக் கட்டளையிட்டு அனுப்பினர். ஆனால் பேதுருவும் யோவானும் அவர்களது கட்டளையைக் குறித்துக் கலங்கவில்லை.

மற்ற சீடர்களுடன் சேர்ந்து ஜெபித்தபோது, பரிசுத்த ஆவியால் நிறையப்பட்டனர். என் கண்ணே! நீயும் ஜெபி. தேவ ஆவியைப் பெற்றுக்கொள்.

**புதிர் 2**



___ ___ ___ ___ ___ ___ ___ ___
17 6 10 9 7 14 1 3

___ ___ ___ ___ ___ ___ ___ ___ ___ ___
15 2 14 12 11 16 13 5 4 8

| க | ச | ச் | டு | ண் | த | ம | ம் | ய | ரி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |

| ல | ல் | வ | ா | ெ | ே | ை |
|---|---|---|---|---|---|---|
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |